2. வினாக்கள்— விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

கூட்டுறவு சர்க்கரை ஆலை.

*18. திரு. பெ. சு. திருவேங்கடம் .

திரு. கே. பிச்சாண்டி:

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், போளூர், கலசபாக்கம் பகுதியில் கூட்டுறவுத்துறையில் சர்க்கரை ஆலை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வட ஆற்காடு இப்பொழுது திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், போளூர் வட்டத்தில் நாளொன்றுக்கு 1,750 டன் பிழிதிறன் கொண்ட ஒரு புதிய கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்க அரசு முடிவெடுத்துள்ளது. அதற்கான விண்ணப்பங்கள் சர்க்கரைத் துறை ஆணையரிடமிருந்து பெறப்பட்டு 18-11-1989-ல் மைய அரசிற்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு மைய அரசுக்கு அந்த விண்ணப்பத்தைச் செய்திருக்கிறது என்று முதலமைச்சரவர்கள் அறிவிக்கிறார்கள். முதலமைச்சரவர்கள் மத்திய அரசோடு தொடர்பு கொண்டு விரைவுபடுத்தி இந்த ஆண்டிலே அந்த ஆலையைத் துவக்கஅரசு நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, 11-வது மாதம்தான் இந்த அங்கீகாரம் கோரி பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. எனவே, இந்த முயற்சி விரைவுபடுத்தப்பட எல்லாவிதமான வகையிலும் மத்திய அரசோடு தொடர்பு கொள்ளப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எப்படியும் இந்த ஆண்டு ஆலையைத் துவக்குகின்ற ஒரு நிலை இருக்கின்ற காரணத்தினாலே அதற்கான இடம் தேர்வு செய்ய முன்னாலேயே தமிழக அரசு நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறிய விரும்புகின்றேன்.

1990, சனவரி 27]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ள போளூர் சர்க்கரை ஆலை மத்திய அரசின் உணவுத் துறை ஸ்கிரீனிங் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளதா என்ற விவரம் அரசுக்கு வந்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு நல்ல முடிவு வர வேண்டுமென்பதற்காகத்தான் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது.

திரு. அ. இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மத்திய அரசின் அனுமதி கேட்டதில் போளூர் சர்க்கரை ஆலை அமைய இருக்கும் இடம் குறிப்பிட்டு அனுமதி கேட்கப்பட்டுள்ளதா அல்லது போளூர் வட்டம் என்று கேட்கப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், போளூர் வட்டம் என்று கேட்கப்பட்டிருக்கிறது. போளூரில் நட்ட நடுவில் நகரத்திற்குள்ளே சர்க்கரை ஆலை வைக்க முடியுமா என்பதை மாண்புமிகு உறுப்பினர் சொல்வாரேயானால் அதுபற்றியும் யோசிக்கப்படும்.

திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் தொழில் துறையில் மிகவும் பின் தங்கிய மாவட்டமாக, விவசாயத்தையே முக்கியத் தொழிலாகக் கொண்டுள்ள மாவட்டம். ஆதலால் விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக வழிவகை செய்யும் வகையில் அந்தச் சர்க்கரை ஆலையை விரைவில் அரசு கொண்டு வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(9-05 மணி)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இவ்வளவு கேள்விகள் கேட்கப்படுவதைப் பார்த்தால் சர்க்கரை ஆலையே வேண்டாம் என்று சொல்வதைப் போல இருக்கிறது.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு சர்க்கரை ஆலை ஆரம்பிக்கிற இடத்தில் நிலத்தைத் தருகிற விவசாயிகளுக்கு அந்த ஆலையில் வேலை வாய்ப்பில் முன்னுரிமை தரப்படுமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்தமுறை இருந்து வருகிறது.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மொத்தம் உற்பத்தியாகும் சர்க்கரையின் அளவு எவ்வளவு? இது வேறு மாநிலங்களுக்கு நம்முடைய மாநிலத்திலிருந்து விற்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் இந்த விவரங்களை எல்லாம் தர இயலும்.

முன்னாள் பாரதப் பிரதமர் மற்றும் அமைச்சர்கள் தமிழ்நாட்டில் சுற்றுப் பயணம் செய்ததற்கான செலவு:

*303 திரு. உ. ரா. வரதராசன் ;

திரு. மா. மணிமாறன் ;

திரு. வீ. தமிழ் மணி ;

திரு. என். பழனிவேல் ;

திரு. எம். முத்தையா :

திரு. வ. அன்பழகன் ;

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1988 சனவரி இறுதியில் தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி பிறப்பிக்கப்பட்ட பின்னர் பாரதப் பிரதமர் மற்றும் மைய அரசின் அமைச்சர்கள் தமிழ்நாட்டில் மேற்கொண்ட சுற்றுப் பயணங்கள் தொடர்பாக மாநில அரசுக்கும், அரசுத்துறை நிறுவனங்களுக்கும் நேரிட்ட மொத்த செலவுத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே,

1988 சனவரி திங்கள் முதல் 1989 சனவரி திங்கள் வரை பாரதப் பிரதமர் மற்றும் மைய அரசின் அமைச்சர்கள் தமிழ்நாட்டில் மேற்கொண்ட சுற்றுப் பயணங்கள் தொடர்பாக ஏற்பட்ட செலவு என்ற வகையில் பிரதமருக்காக ஆன செலவு விவரங்கள் 4 கோடியே 47 லட்சத்து 17 ஆயிரத்து 457 ரூபாய் ஆகும். மற்ற அமைச்சர்களுக்காக ஆன செலவுகள் 5 லட்சத்து 60 ஆயிரத்து 318 ரூபாய் ஆகும்.

திரு. உ. ரா. வரதராசன் : தலைவர் அவர்களே, மூலக் கேள்வியில் அரசுக்கான செலவுகள் எவ்வளவு? அரசுத் துறை நிறுவனங்களுக்கு ஏற்பட்ட செலவுகள் எவ்வளவு என்று நான்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

கேட்டிருக்கிறேன். காரணம், அரசு செய்த பாதுகாப்புச் செலவுகள் மட்டுமல்லாமல், முன்னாள் பாரதப் பிரதமர் அவர்களும், அமைச்சர்களும் இங்கே பயணம் செய்தபோது ஏராளமான ஆடம்பரமான விளம்பரங்கள் செலவுகளுக்கு எல்லாம் கூட அரசுத் துறை நிறுவனங்கள் பயன்பட்டதாக பத்திரிகை செய்தியாக வந்திருக்கிறது. ஆகவே அந்த நிலையில், அந்த வகையிலான செலவுகள் எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பொதுவாக பிரதமர் வருகை குறித்து மத்திய, மாநில அரசுகளிடம் ஒரு குறிப்பு இருக்கிறது. பிரதமர் வருகை தந்தால் அலுவல் காரணமாகவோ அல்லது அலுவல் அல்லாத காரணமாகவோ வருகை தருவது என்று ஒரு பட்டியல்; தேர்தலுக்காக வருவது என்பது ஒரு பட்டியல். பொதுக் கூட்டங்களில் பேசும் போது அந்த பொதுக் கூட்ட மேடைகளுக்காக ஆகும் செலவுகளை மாநில அரசுகளே ஏற்றுக் கொள்ள வேண்டும். அதற்குப் பிறகு அதிலே 25 சதவீதம் அல்லது 2,500 ரூபாய் இதில் எது குறைவோ அதனை அந்த தொடர்புடைய அரசியல் கட்சியிடமிருந்து பெற வேண்டும் என்று இருக்கிறது. இவ்வளவு விவரங்கள் தான் என்னிடம் இருக்கின்றன.

திரு. மா. மணிமாறன் : துணைத் தலைவர் அவர்களே, முன்னாள் பாரதப் பிரதமர் அவர்கள் தமிழ் நாட்டிற்கு வந்த மொத்தப் பயணங்களில் எத்தனை தடவைகள் அரசினுடைய திட்டங்களை அறிவிப்பதற்காக, அரசு அலுவல்களுக்காக வந்திருக்கிறார்கள்? அரசு அல்லாத அலுவல்களுக்காக வந்ததற்கான மொத்தச் செலவு எவ்வளவு? அரசு அல்லாத அலுவல்களுக்கு வந்த செலவில் எவ்வளவு பணம் அவர் சார்ந்துள்ள அந்தக் கட்சியிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டியிருக்கிறது? அப்படி வசூலிக்க வேண்டிய பணத்திற்கு அரசு ஏதாவது நோட்டீஸ் கொடுத்து, அந்தக் கட்சியினர் ஒப்புக் கொண்டிருக்கிறார்களா? அல்லது மறுத்து இருக்கிறார்களா? (மணியடிக்கப் பெற்றது.)

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, பிரதமருக்கான செலவு 4 கோடியே 47 லட்சத்து 17 ஆயிரத்து 457 ரூபாய் என்று குறிப்பிட்டேன். அதிலே ஓராண்டு காலத்தில் அவர்கள் 11 தடவைகள் வந்திருக்கிறார்கள். அவர்கள் வந்த நாட்கள் மொத்தம் 30 நாட்கள். அதற்கான செலவு விவரம் தான் இப்போது குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலே அரசு காரியமாக வந்தது, அரசு அல்லாத காரியமாக வந்தது என்று பிரித்து எடுக்க முடியாத அளவிற்கு இரண்டும் பின்னிப் பின்னி இருப்பதால் அவைகளைச் சொல்ல இயலாது. பிரதமருடைய வருகையை ஒட்டி காங்கிரஸ் கட்சியிடமிருந்து

வரவேண்டிய தொகை இதுவரையில் 7 லட்சத்து 30 ஆயிரத்து 766 ரூபாய். அதற்கான கடிதமும், நினைவூட்டுக் கடிதங்களும் அந்தக் கட்சிக்கு அரசின் சார்பாக தொடர்ந்து அனுப்பப்பட்டு வருகின்றன.

(9-10 மணி)

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்னாள் பாரதப் பிரதமர் அவர்கள் தமிழ் நாட்டிற்கு வருகை தந்திருந்ததற்காக ஆகியிருக்கின்ற செலவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இது போன்று வேறு எந்த நாட்டிலாவது இப்படிப்பட்ட . . . . (மணியடிக்கப்பெற்றது.)

முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களின் சிறுநீரக அறுவை சிகிச்சைக்காக அரசு செலவு.

*7036. **திரு. செங்கை சிவம் :**

திரு. வீ. தமிழ்மணி :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களின் சிறு நீரக அறுவை சிகிச்சைக்காக அரசு செலவிட்டதொகை எவ்வளவு?

(ஆ) செலவிடப்பட்ட தொகை திருப்பி அரசுக்கு செலுத் தப்பட்டு விட்டதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) முன்னாள் முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந் திரன் அவர்களின் சிறுநீரக அறுவை சிகிச்சைக்காக அரசு செல விட்ட தொகை ரூ. 1,63,25,560.42.

(ஆ) இதில், ரூ. 1,02,89,897.05-ஐ அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அரசிற்குத் திரும்பி செலுத்தி விட்டது. திருப்பிச் செலுத்தப்படாத தொகை சுமார் ரூ. 61 இலட்சம். அது செலுத்தப்படவேண்டியதில்லைஎன 8-11-1984-ல் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் அந்தச் செலவை அரசே ஏற்கவேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டது.

திரு. செங்கை சிவம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்கள் எத்தனை முறை மருத்துவ சிகிச்சைக்காக வெளிநாடு சென்றார்? எந்தெந்த நாடுகளுக்குச் சென்றார்? அப்படி முதல் முறையாக அவர் சென்றபோது யார் யார் அவருடன் சென்றார்கள் என்ற விவரத்தை தங்கள் மூலமாக அறிய விரும்பு கிறேன்.